# *நம் ஜோதிடரின் T.V பேட்டியின் போது அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும், பதில்களும்*

## 1) ஜோதிடம் எந்த அளவு நம்பலாம்?

ஜோதிடம்ங்கறது முழுக்க, முழுக்க அறிவியல் தான். எந்த விஞ்ஞான தொழில் நுட்பமும் இல்லாமலேயே, நம் முன்னோர்கள் வானில் கிரகங்கள் இயங்குவதை வேதத்தின் ஒரு பகுதியான ஜோதிடத்தின் மூலம் கண்டுபிடித்துள்ளார்கள்.

அதுவும், ஒவ்வொரு கிரகத்தின் அலை வரிசைகளையும், அவற்றின் தூரம், அவைகள் பரவும் காலம், பூமியில் உள்ள உயிரினங்களுக்கு அவற்றால் ஏற்படும் இன்ப துன்பங்களையெல்லாம் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே மிகத்துல்லியமாக நம் ஜோதிட நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. இதை யாறும் மறுக்கமுடியாது.

நம் இந்தியாவின் கலாச்சாரத்தில் ஜோதிடத்துக்கு மிக முக்கிய பங்கு உண்டு. இதிகாசங்களில் ஒன்றான மகாபாரதத்தில் பஞ்ச பாண்டவர்கள் போர் புரியும் காலங்களில் தார பலம் உள்ள நாட்களைத்தான் தேர்ந்தெடுப்பார்கள்.

அப்படிப்பட்ட ஜோதிட அறிவியலை நாம் நம்பாமல் எப்படி விடமுடியும்.?!
தற்போது ஜோதிடத்தில் பட்டயபடிப்புகள், ஜோதிடவியல் இளங்கலை, முதுகலைப் பட்டபபடிப்புகளும் பல கல்லூரிகளில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், இதில் ஆர்வம் உள்ளோர் ஜோதிஷத்தை ஆராய்ந்து Dr.பட்டமும் பெற்றுள்ளார்கள்.

so, ஜோதிடம் என்பது விஞ்ஞான ரீதியான கோள்களின் அல்லது planet ன் அசைவுகளின் கணக்கீடுகளே என்பதால் ஜோதிடத்தை 100% நம்பலாம்.

## 2) ஜோதிடம் வேறு எண்கணிதம் வேறா சார்? எண்கணிதத்தைப்பற்றியும் சொல்ல முடியுமா ?

ஜோதிடத்தில் எண்கணிதம் என்பது ஜோதிடத்தை நுட்பமாக ஆராய ஏற்படுத்திக்கொண்ட ஒரு கருவி அல்லது tool ஆகும். எந்தத்துறையிலும் கால வளர்ச்சிக்கேற்ற முன்னேற்றத்தால் அந்தத்துறையில் நுண்ணிய ஆய்வீடு செய்ய பல கருவிகள் அல்லது tool கள் கண்டுபிடிக்கப்படும்.

அதேபோலத்தான் ஜோதிடத்திலும், முதலில் குழந்தைகளுக்கு பெயர் வைக்கும்போது நாம் வணங்கும் தெய்வங்களின் பெயர்களைத்தான் வைத்தார்கள். அதிய மான், ராஜராஜன், மணிமேகலை, குண்டலகேசி, அமராவதி, கோவலன், கம்பன், ராமன், முருகன் இப்படி செந்தமிழ் பெயர்களாய் வைத்த காலம் ஒன்று இருந்தது.

அப்போது ஜோதிடம் மட்டும்தான் இருந்தது. இன்றைய நவீன யுக்திகள் இல்லாததால் tools கண்டுபிடிக்க இயலவில்லை. ஆனால் இப்போது ஒலி,ஒளி அலைகளை மிகமிக துல்லியமாக கணக்கிடுகிறோம். ஒளியை விடவும் வேகமான cancard விமானங்களை பறக்கவிடுகிறோம்.

இந்த ஒலியின் அதாவது சப்தத்தின் ஆராய்ச்சியின் விளைவுதான் எண்கணிதம். ஒலி அலைகளின் அதிர்வுகளே நமக்கு காதில் சப்தமாக உணரப்படுகிறது. அந்த அதிர்வுகளின் புரிதலே மொழி எனப்படும். எண்கணிதத்தின் சக்தியே மொழியில்தான் உள்ளது. அதாவது உச்சரிப்பில் தான் உள்ளது.

மந்திரங்களை உச்சரிப்பதால் பலன் கிடைப்பதாய் உணர்கிறோம்.அப்படின்னா என்ன? பலதடவை உச்சரிப்பதால் அந்த சுற்றுப்புறத்தில் ஒரே மாதிரியான ஒலி அதிர்வுகள் உருவாக்கப்படுகின்றன. அந்த குறிப்பிட்ட மந்திரங்கள் அல்லது ஒலி அதிர்வுகள் கிரக அலைவரிசைகளை தட்டுகின்றன. அடிக்கடி அவ்வாறு நிகழ்வதால் மனிதனுக்கு நல்லதோ அல்லது கெட்டதோ நடக்கின்றது. பெயரும் அப்படித்தான் பலமுறை அந்த உச்சரிப்பு நடப்பதால் நமக்கு நல்லது செய்யும் அலைவரிசைகள் அதிர்வுற்றால் நல்லதும் கெட்டது செய்யும் கிரகங்களின் அலைவரிசைகள் அதிர்வுற்றால் தீமையும் நடக்கும்.

1 - சூரியன், 2 - சந்திரன், இப்படி ஒவ்வொரு கிரகத்திற்கும் அடிப்படை எண்கள் தரப்பட்டுள்ளன.

எண்கணிதம் மற்றும் ஜோதிடத்தையும் ஆராய்ந்து பெயர் வைக்கும் நவீன முறையே Astronumerology ஆகும். அதிலும் நுண்ணிய ஆய்வீடு செய்ய பயன்படுவது பிரமீடு முறையாகும்.

## 3) பரிகாரங்கள் பண்ணினா உண்மையாவே தோஷங்கள் விலகுதா? எல்லா தோஷங்களுக்கும் பரிகாரம் இருக்குதா?

why not? கண்டிப்பாக உண்மை.

விதி என்பதை மாற்றும் திறன் மனிதருக்கில்லை. ஆனால் பகவான் நமக்கு கொடுத்துள்ள சக்தியான மதியால் அதன் துன்பங்களிலிருந்து விடுபடலாம். உதாரணத்துக்கு மழை பெய்வதும், நிற்பதும் விதி. அதை இயற்கையாக பெய்ய வைக்கவும் முடியாது, பெய்வதை நிறுத்தவும் முடியாது. ஆனால் குடை பிடித்துக் கொள்கிறோம் அல்லது காரில் சென்று முழுவதுமாக மழையை ஜெயிக்கிறோம் அல்லவா அது போலத்தான் ஜோதிடப்பரிகாரங்களும்.

பிறப்பையும் இறப்பையும் மாற்ற முடியாது, ஆனால் வாழ்வின் நடுவில் உள்ள ஏற்றதாழ்வுகளில் சில மாற்றங்களை பரிகாரங்கள் மூலம் செய்து கொள்ள முடியும். எல்லா மந்திரங்களையும் 108 முறை உச்சரிக்கச்சொல்லி பரிகாரம் சொல்வதன் அர்த்தம், வலிமையான அந்த உச்சரிப்புகளால் நடக்கும் ஒலி அதிர்வுகள் அவரவர்களுக்கு தேவையான தெய்வங்களின் அருளை அதாவது அலைவரிசைகளை அவர்கள் உடலில் இறக்கி தேவையான மாற்றங்களை செய்கிறது.

ராகு மற்றும் கேது என்பவை கிரகங்கள் அல்ல. அவை ஒரு காந்த சக்தியாகும். சூரியன், சுக்கிரன், குரு, ....... ஆகிய 7 கிரகங்களுக்கும் தனித்தனி வீடுகள் உள்ளன. அவற்றை விஞ்ஞானிகள் கருவிகள் மூலம் பார்க்க முடியும். சந்திரன், சுக்கிரன், சூரியன் ஆகிய கிரகங்களை நாமே நேரில் பார்க்கிறோம். ஆனால் ராகு,கேதுக்களை யாருமே பார்க்க முடியாது. ஏனெனில் அவை ஒரு MAGNATIC FORCE ஆகும்.

சூரியனுக்கு சில பாகைகள் அருகில் வரும் கிரகங்கள் அஸ்தமனமாகின்றன என்பது ஜோதிட விதி. ஏனெனில் சூரியன் நவக்கிரக நாயகன். அவரை சுற்றித்தான் மற்றகோள்களின் இயக்கமே நடைபெறுகிறது. அப்படிப்பட்ட சூரியனே ராகு,கேதுவிடம் அஸ்தமனமாகிறார்.

அவ்வளவு பவர் கொண்ட ராகு கேதுக்களினால் தான் பல தோஷங்கள் உருவாகின்றன.

திருமண தோஷம்,
புத்திர தோஷம்,
பித்ரு தோஷம்,
கால சர்ப்ப தோஷம்,
ஆயுள் தோஷம்,
மாங்கல்ய தோஷம்
களத்திர தோஷம்

இன்னும் பல முக்கிய தோஷங்களை ராகு மற்றும் கேது என்ற மிக அதிக வலிமை கொண்ட இந்த கிரகங்களினால் பகவானால் உருவாக்கப்படுகின்றன.

அப்படிப்பட்ட ராகு, கேதுவின் வலிமையான தோஷங்களுக்கும் பரிகாரங்களை நம் முன்னோர்கள், சித்தர்கள், ஜோதிட அறிஞர்கள் எழுதி வைத்துள்ளனர். முறையான பரிகாரங்களை செய்வதன் மூலம் பல கொடுமையான கிரக தோஷங்களிலிருந்து நம்மை காத்துக்கொள்ள முடியும்.

இதில் எங்கே தப்பு நடக்கிறதென்றால், எந்த கிரகத்தால் அந்த தோஷம் என்பதை சரியாக கணித்து முறையான கிரக தோஷ பரிகாரம் செய்தால்தானே தோஷம் தீரும். உதாரணத்திற்கு, வயிற்றுவலி என்றால் வயிற்றுக்கான Dr. டம் போனால்தான் வயிற்று வலி சரியாகும். அதை விட்டுவிட்டு கால் வலி Dr.டம் சென்றால் என்னாகும்?. அதுபோலத்தான் பரிகாரங்களும். எந்தெந்த கிரஹங்களால் தோஷம் உள்ளதோ, அந்த கிரகங்களுக்கான மந்திரங்கள், ஸ்தலங்கள், மற்றும் ரத்தினங்கள் ஆகியவையே அவற்றைப்போக்கும் சக்தியுடையதாய் இருக்கும். அதிலும், தோஷத்தின் வலிமைக்கேற்றவாறு கால வித்தியாசம் மாறுபடும். சிலருக்கு உடனே solution கிடைக்கும், சிலருக்கு சில காலம் கழித்துக்கிடைக்கும். ஆனால் முறையான பரிகாரம் செய்யாமல் அந்த தோஷம் கண்டிப்பாய் கழியாது.

அன்னதானம், கோயில் கைங்கரியங்கள், கல்விக்கு உதவுதல், ஆதரவற்ற குழந்தைகள், முதியோர்களுக்கு உதவுதல் போன்ற பரிகாரங்களினால் இந்த ஜென்மத்தில் மட்டுமல்லாது, வரும் ஜென்மங்களிலும் இன்பமுண்டு.

## 4) பெயரை மாற்றினால் என்ன நடக்கிறது?

பெயர் என்பது ஒரு குட்டி மந்திரம்.

*"ஸ்ரீ ஆஞ்சனேயாய வித்ம ஹே!*
*வாயு புத்ராய தீமஹி!*
*தன்னோ அனுமன் ப்ரசோதயாத்"*

என்பது ஸ்ரீ ஆஞ்சனேயரின் காயத்ரி மந்திரம்.இந்த மந்திரத்தை 60 முறை ஆஞ்சனேயர் சன்னிதியில் பய பக்தியுடன் நம்பிக்கையுடன் உச்சரித்தால் கடன் தொல்லை,நோய் தொல்லைகள் நீங்கும் என்பது உண்மை.அப்படியென்றால் பெயரும் ஒரு மந்திரமாகத்தான் செயல்படுகிறது. உதாரணத்திற்கு மீனா என்று ஒரு குழந்தைக்கு பெயர் வைப்பதாய் கொள்வோம்.அந்தக் குழந்தையை ஒரு நாளைக்கு குறைந்தது 50 முறையாவது பெயரை சொல்லி அனைவரும் அழைப்பார்கள்.

மந்திரங்களை பலமுறை உச்சரிக்கும்போது எப்படி காற்றில் அலைவரிசைகள் Disturb செய்யப்படுகின்றனவோ,அதே போலத்தான் பெயரை பல முறை உச்சரிக்கும்போதும் காற்றில் அலைவரிசைகள் அதிர்வுறுகின்றன. அப்படி அதிர்வுறும் அலைவரிசைகளில் அந்தக்குழந்தைக்கு அவள் ஜாதகப்படி நல்ல அலை கிரகத்தின் அலைவரிசைகளாய் இருந்தால் அந்தக்குழந்தையின் எண்ணங்கள் possitive ஆக அதாவது நன்றாக படிக்கலாம், ஒழுக்கமுடன் இருக்கலாம், நல்ல முறையில் முன்னேறலாம், பெரியோருக்கு மரியாதை தரவேண்டும் போன்ற உயரிய பண்புகள் கிடைக்கும்.அப்படியில்லாமல் அந்தக்குழந்தையின் ஜாதகப்படி கெட்ட கிரகங்களின் அலைவரிசைகளில் பெயர் அமைந்து விட்டால் என்னாகும்? எதுவுமே நம்மால் முடியாது என்ற எண்ணமும் சோம்பேறித்தனம் போன்ற விரும்பத்தகாத எண்ணங்கள் அந்த குழந்தைக்கு உருவாகும்.

மேலும் இன்னொரு விஷயமும் உண்டு.ஒரு குழந்தையை படிப்பு முடியும் வரை அதாவது 20 - 25 வயதுவரை, தாய் தந்தை கூட இனிஷியலுடன் பெயரை உச்சரிக்க மாட்டார்கள்.படிப்பு முடிந்த பிறகு எங்காவது ஒரு வேலையில் அமரலாம்,IAS,IPS அல்லது பெரிய நிறுவனங்களில் General manager போன்ற பெரிய பதவிகளில் அமரும்போது நிறைய கையெழுத்துப்போட வேண்டி வரும்.அப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் இனிஷியலுடன் உள்ள பெயருக்கான பலன் கிடைக்கும்.அதுவரை இனிஷியல் என்பது மறைவாகத்தான் இருக்கும்.இதிலிருந்து என்ன தெரிகிறது.?

பெயர் என்பது இனிஷியல் இல்லாமல் உச்சரிக்கப்படும்போதும் நல்ல அலைவரிசைகளைக்கொண்டிருக்க வேண்டும் என்பது தெரிகிறது. உச்சரிக்கப்படும்போது அதிர்வுறும் அலைவரிசைகள் நல்ல பலன்களை கொடுப்பது மந்திர விஷயத்தில் உண்மையாகும்போது பெயரிலும் அது உண்மையே.

ஆகவே பெயர் வைக்கப்படும்போது இனிஷியல் இல்லாத நிலை,இனிஷியல் இணைக்கப்பட்ட நிலை என்ற இரு நிலைகளிலும் பார்த்து யோகமான அலைவரிசையில் பெயர் வைத்துவிட்டால் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

## 5) திருமணப்பொருத்தம் - உண்மையா - விளக்கம்?

திருமணப்பொருத்தம் என்பது மிகமிக அவசியமான ஒன்று. ஒருவருடைய வாழ்வில் பெரும்பகுதி திருமணத்துக்குப்பின்தான் அமைகிறது. அதுவரை தாய் தந்தையிடம் இருந்த பொறுப்புகள் நம் மீது விழுகின்றது. முக்கியமான முடிவுகள் எடுத்தாகவேண்டிய கட்டாயமும் ஏற்படுகிறது. வரப்போகும் அவரவர் சந்ததியை முறைப்படுத்தி develop செய்கின்ற மிக முக்கியமான பொறுப்பும் இருக்கின்றது. இந்த மாதிரி மிக முக்கியமான காலகட்டம் என்பது வாழ்வில் அனைவருக்கும் ஆணோ, பெண்ணோ யாராக இருந்தாலும் திருமணத்திற்கு பின்புதான் வருகிறது.

இவ்வளவு பொறுப்புகளையும் மனதுக்கு இயைந்த மனைவி / கணவன் அமைந்தால் ஈஸியாக செய்து விடலாம். மாறாக எதிர்மறையாக இருந்தால் வாழ்க்கையே நரகமாகிவிடும் என்பது கல்யாணமான நம் நேயர்கள் அனைவருக்கும் தெரியும்.மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்.அப்படிப்பட்ட முக்கியமான வாழ்க்கையின் கால கட்டத்தில் வரும் திருமணத்திற்கு பொருத்தம் பார்த்து சேர்ப்பது என்ற விதியை ஜோதிஷம் கொடுத்துள்ளது, நம் இந்து மதத்திற்கு கிடைத்த பெறும் பொக்கிஷம்.அதை முறையாக செய்து கல்யாணம் செய்து கொள்ளும்போது நல்ல சந்ததி வளர்ச்சி மற்றும் இனிமையான வாழ்வு கிடைக்கப்பெறலாம்.

திருமணப்பொருத்தம் பார்க்கப்படும்போது அதிகப்படியான பொருத்தங்கள் இருக்க வேண்டும். முக்கிய பொருத்தங்களும் அதிகமாக இருக்கவேண்டும்.

குணமறிந்து பொருத்தப்பட வேண்டும், அதாவது ஒரு பெண்ணுக்கு கோபம் அதிகமாக வரும் எனில், மணம் செய்யப்போகும் ஆணுக்கு பொறுத்துப்போகும் குணம் இருக்க வேண்டும். மாறாக அவருக்கும் கோபம் அதிகம் வந்தால் என்னாகும்.? எப்போதும் சண்டை தான் இருக்கும்.இந்த விஷயத்தில் 10க்கு 10 பொருத்தங்கள் இருந்தாலும் பயன் இல்லை.

அதேபோலத்தான் புத்திர தோஷமும்,ஆண் அல்லது பெண்ணுக்கு புத்திர தோஷம் இருந்தால் குழந்தை பிறப்பு தாமதமாகும் அல்லது சந்ததியே கிடைக்காது.அப்போது என்ன செய்ய வேண்டும்? புத்திர தோஷம் இருக்கும் வரனுக்கு புத்திர தோஷம் இல்லாத வரனை பொருத்த வேண்டும்.மகேந்திர பொருத்தம் வந்தாலும் கூட புத்திர தோஷங்கள் கடுமையாக இருப்பதை நூற்றுக்கணக்கில் நான் பார்த்திருக்கிறேன்.

இந்த இடத்திலும் 10க்கு 10 பொருத்தங்கள் இருந்தும் பிரயோஜனமில்லை. அதனால் தான் சொல்கிறேன் பொருத்தம் பார்க்கப்படும்போது ஜாதகத்தில் உள்ள தோஷங்கள், யோகங்கள் ஆகியவற்றையும் பார்த்து பொருத்தப்பட வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இருவருக்கு திசா சந்திப்பு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.என் அனுபவத்தில் பலர் ஜாதகங்களில் பொருளாதார சிக்கல்,புரிந்துணர்வு இல்லாமல் எப்போதும் சண்டை, வீட்டைவிட்டு எப்போது வெளியில் செல்வோம்,அப்போதுதான் நிம்மதி என்ற உணர்வு இவைகள் வரக்காரணம் திசா சந்திப்புதான். இவை மட்டுமல்ல ஒரே தசை நடக்கும் தம்பதிகளுக்கு குழந்தை பிறந்தால் 90% அந்தக்குழந்தைக்கும் அதே தசை வரும். ஜோதிடரிடம் பிரச்சினை என்று போனால் மூன்று பேரும் பிரிந்திருக்க வேண்டும் என்று சொல்வார்.இதெல்லாம் தேவையா?

அதனால் தான் பொருத்தம் பார்க்கும்போது இதெல்லாம் முக்கியமாக பார்க்கப்பட வேண்டும்.

## 6) கம்ப்யூட்டரில் திருமணப்பொருத்தம் பார்ப்பது சரியா?

கம்ப்யூட்டரில் திருமணப்பொருத்தம் பார்ப்பது, ஒரு ஜோசியராக சொல்வெதென்றால் சரியானதல்ல. ஒரு வரனின் தந்தைக்கு 10 ஜாதகம் கிடைக்கிறது, 10ல் எதெதை ஜோதிடரிடம் கொண்டு செல்லலாம் என்பதை பார்க்க வேண்டுமானால் கம்ப்யூட்டரில் பொருத்தம் பார்த்துக்கொள்ளலாம்.

அதாவது ஜெனன நட்சத்திரத்திற்கு பொருந்துகிறதா என்பதை மட்டும் தெரிந்துகொள்ள அதை பயன்படுத்திக்கொள்ளலாம். மற்றபடி ஜாதக ரீதியாகவும்,எண்கணித ரீதியாகவும் குழந்தை தோஷம் உள்பட தோஷங்களையும், யோகங்களையும் அலசி ஆராய்ந்து பார்க்க வேண்டுமானால் நல்ல ஜோசியரிடம் கொடுத்து பார்ப்பதுதான் சிறந்தது.

ஏன்னா?,கம்ப்யூட்ட்ரில் உள்ள சாப்ட்வேரில் நட்சத்திர பொருத்தம் பஞ்சாங்கப்படி பதிவு செய்யப்பட்டிருக்கும்.செவ்வாய் தோஷத்தை 2,4,7,8,12 என்று பொதுவான விதிப்படி பார்க்க பதிவு செய்யப்பட்டிருக்கும்.அதற்கு மேல் அதற்கு பார்க்கத்தெரியாது.மேலும் புத்திர தோஷ வலிமையையும் அந்த சாப்ட்வேருக்கு பார்க்கத்தெரியாது.

அதனால் கம்ப்யூட்டரில் திருமணப்பொருத்தம் பார்ப்பதும், 25 ரூபாய்க்கு புத்தகம் வாங்கி நாமே பார்த்துக்கொள்வதும் ஒன்றுதான்.

வாழ்க்கையில் கல்யாணம் என்பது ஒருமுறைதான். அதை முறையாக பார்த்து செய்து கொண்டால் வாழ்க்கை வளமானதாகும்.

## 7) திருமணப்பொருத்தத்தில் ராகு கேதுவின் தோஷம் என்றால் என்ன?

அருமையான கேள்வி,ஏன்னா?, இப்போதைய காலத்தில் இந்த ராகு கேது தோஷமே இல்லாத ஜாதகம் கிடைப்பதே அரிதாகிவிட்டது.
ராகு கேது ங்கற கிரஹங்கள் சொந்த வீடு எதுவும் இல்லாத ஒரு வகையான காந்தப்புலன்கள் ஆகும்.சூரியன்,சந்திரன்,சுக்கிரன்,புதன்,குரு, செவ்வாய், சனி ஆகிய 7 கிரகங்களையும் நாம் கண்ணால் பார்க்க முடியும்.ஆனால் ராகு கேது வை பார்க்க முடியாது.

சூரியன் நவக்கிரஹ நாயகன் என்று சொல்லப்படுபவர்.சூரியனிடம் குறிப்பிட்ட பாகைகளுக்குள் அருகில் வரும் கிரஹங்கள் தன்னை இழந்து அஸ்தமனமாகின்றன.அப்படிப்பட்ட சூரியனும் ராகு கேதுவுக்கு அருகில் சில பாகைக்குள் வரும்போது அஸ்தமனமாகிவிடுவார். அதாவது கிரஹண தோஷத்திற்கு ஆளாகி விடுகிறார்.

இப்போது விஞ்ஞானிகள் கண்டு பிடித்த கிரஹணத்தை நம் ஜோதிட அறிஞர்கள் 2000 வருஷத்திற்கு முன்பே துல்லியமாக எந்தக்கருவியும் இல்லாமல் கண்டு பிடித்து குறித்து வைத்துள்ளார்கள்.

அந்த மாதிரி கிரஹண நேரத்தில் சூரிய சந்திரனுக்கு சக்தி குறைவதால் மிகப்பெரிய கோயில்களில் கூட நடை சாத்தப்படுகிறது.

இவ்வளவு பவரான ராகு கேதுக்கள் ஜாதகக்கட்டத்தில் எந்த இடத்தில் இருக்கின்றனவோ அந்த இடத்தை கெடுத்து விடக்கூடியவை. உதாரணத்திற்கு 2ல் இருந்தால் தனஸ்தானம், குடும்ப, வாக்கு ஸ்தானம் கெட்டு விடும்.அதே போல 5ல் இருந்தால் குழந்தை பிறக்காத தோஷம்.7ல் இருந்தால் கல்யாண தோஷம், 9ல் இருந்தால் முன்னோர் சாபம் இப்படி எங்கிருந்தாலும் ராகு கேதுக்கள் தோஷம் கொடுப்பார்கள்.

2மற்றும் 7ல் இருந்தால் திருமண தோஷம், அதாவது அந்த இடத்தில் இருக்கும் ராகு கேதுக்கள் திருமணத்தடையை ஏற்ப்படுத்துகின்றன. மேலும் குடும்பம் உருவாவதைத் தடுக்கின்றன. அப்படிப்பட்ட தோஷமுடைய ஒரு பெண்ணுக்கோ அல்லது ஆணுக்கோ நாம் என்ன செய்ய வேண்டும், அந்த குறிப்பிட்ட இடங்கள் கெடாமல் இருக்கும் வரனை பொருத்த வேண்டும். ஆனால் அப்படி செய்யாமல் ராகு கேது இருந்தால் ராகு கேது இருக்கும் ஜாதகத்தை பொருத்துவது மிகவும் தவறு.தெரிந்தே அவர்களின் வாழ்வை கெடுப்பது போலத்தான் இது.

7ல் ராகு இருந்தால் என்ன செய்வார்? கண்டிப்பாக நல்ல இயைந்த மணவாழ்க்கையை கிடைக்க முடியாதபடி செய்வார்.7ம் அதிபதி நன்றாக இருந்தாலும் கூட பாதிப்பு இருக்கும். இந்த ஜாதகத்திற்கு அதே போல 7ல் ராகு இருக்கிற ஜாதகத்தை பொருத்தினால் என்னாகும்.? நிச்சயமாக அந்த இருவருக்கும் வாழ்க்கை நரகமாகத்தான் இருக்கும்.ஏன்னா?ரெண்டு பேருக்குமே கணவனுக்கு மனைவி ஸ்தானத்தையும்,மனைவிக்கு கணவன் ஸ்தானத்தையும் ராகு கெடுத்துவிட்டார் அல்லவா!

இது எப்படி பழக்கமாச்சுன்னா!,பல புரோக்கர்கள் ஜாதகத்தைப்பற்றி அறிந்திருக்க நியாயமில்லை.அவர்களிடம் தோஷமான இதே போல ராகு கேது தோஷ ஜாதகங்கள் தான் வரும்.ஏன்னா அங்கே தான் தோஷம் இருக்கிறது,ஆடோமேட்டிக்கா கல்யாணம் லேட் ஆகும்,அதனால் புரோக்கர்களிடம் ஜாதகம் வரும்.பல ஜாதகங்கள் தோஷம் இருப்பதால் மட்டுமே புரோக்கர்களிடம் வருகின்றன,புரோக்கர் என்ன செய்வார்?இங்கும் ராகு கேது,அங்கும் ராகு

கேது சரியான பொருத்தம் என்று சொல்லி சிபாரிசு செய்வார், இப்படி பழக்கமானதனால் தான் ராகு கேது இருந்தால் ராகு கேது இருக்க வேண்டும் என்று நம்பத்தொடங்கிவிட்டார்கள்.

actual ஆ அந்த ராகு கேது என்ன செய்யும்? அந்த கெட்ட தசைகள் எப்போது வரும்? அவைகளால் ஏற்ப்பட்டுள்ள தோஷங்களின் வலிமை இவைகளை பார்த்துத்தான் பொருத்த வேண்டுமே தவிர ராகு கேது இருந்தால் ராகு கேது இருக்க வேண்டும் என்ற விதியெல்லாம் இப்போதைய மனிதர்களால் உருவாக்கப்பட்டவை.

அதனால் பொருத்தம் பார்க்கும்போது ராகு கேது விஷயத்தில் ரொம்ப கவனம் தேவை.

## 8). பித்ரு தோஷம்னா என்ன?

பித்ருக்கள்னா நம் முன்னோர்கள்.அதாவது எல்லா மனிதருக்கும் இரண்டு வழிகளில் நன்மைகள் நடக்கின்றன.ஒன்று அவரவர் குல தெய்வத்தின் மூலம், மற்றொன்று அவரவர் முன்னோர்களின் மூலம்.குல தெய்வத்தை பூஜிக்காமல்,குல தெயத்தின் கோயிலுக்கு போகாமல் மற்ற கோயில்களுக்கு ரெகுலராக போனாலும் பலன் கிடைக்காது.

உதாரணமாக திருப்பதிக்கு வருஷ வருஷம் போனாலும்,பழனிக்கு மாலை போட்டு வருஷா வருஷம் போனாலும் குல தெய்வத்தின் கோயிலுக்கு செல்வது இல்லை என்றால் முருகனோ,வெங்கடேச பெருமானோ பலன் தரமாட்டார்கள்.அவர்கள் எல்லோரும் குல தெய்வத்தின் வழியாகத்தான் பலன் தருவார்கள்.குல தெய்வம் வாங்கிக்கொடுக்க மறுத்துவிட்டால் பலன் நம்மை சேராது.அதனால் குல தெய்வத்தின் கோயிலுக்கு மாதம் ஒருமுறையாவது சென்று வரவேண்டும்.வருடத்துக்கு ஒரு முறை அபிஷேகம் செய்ய வேண்டும்.எந்த ஒரு தெய்வத்தின் கோயிலுக்கு போவதென்றாலும்,குலதெய்வத்தின் கோயிலில் சென்று வணங்கி சொல்லிவிட்டு சென்றால் அதற்கான பலன் கைமேல் கிடைக்கும்.

குல தெய்வம் இல்லாமல் நாம் இல்லை.அவரவர் குழந்தைகளுக்கு பெயர் வைப்பதாக இருந்தாலும், குலதெய்வத்தின் சன்னிதியில் வைப்பதுதான் சிறந்த பலனை கொடுக்கும்.பெயர் வைப்பது என்பது நம் வாழ்நாளிலேயே ஒரே முறை மட்டுமே நடப்பது. அதனால் நம் குல தெய்வ சன்னிதியில் வைக்கப்பட்டால் அந்தக்குழந்தையை வாழ்நாள் முழுதும் குல தெய்வம் கூட இருந்து காப்பாற்றும்.

குலதெய்வத்தை போலத்தான் நம் பித்ருக்களும். இந்து மதத்தில் அனைவருக்கும் முக்கியமான கடமைகளில் ஒன்று பித்ரு தர்ப்பணம் ஆகும்.அவர்களின் ஆசி இல்லாமல் நம் வாழ்வில் முக்கியமான நல்ல நிகழ்ச்சிகள் நடக்காது. பலருக்கு என்னதான் கஷ்ட்டப்பட்டாலும் முன்னேறமுடியாத சூழல் உருவாகும்.நம் கண் முன்னே நம்மை விடவும் கஷ்டப்படாதவர்கள் முன்னேறிவிடுவார்கள். அல்லது சமமான கல்வி பயின்று 5 பேர் ஒரே வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, சர்வீஸ் செய்து கொண்டிருக்கும்போது 4பேருக்கு பிரமோசன் சரியான டைமில் கிடைத்துக்கொண்டிருக்கும், ஆனால் ஒரே ஆளுக்கு மட்டும் கிடைக்காது, காரணம் தெரியாது.இந்த மாதிரி நடக்க காரணம் பித்ரு தோஷம் தான்.

அதே போல வீட்டில் உள்ள நம் பெண்ணுக்கு வரனே அமையாது,எதிர்த்த வீட்டில் உள்ள பெண் நம் பெண்ணை விடவும் அழகிலும்,படிப்பிலும் குறைவாக இருந்தாலும்,மனதிற்கினிய மாப்பிள்ளை அமைந்து விடும்.இதற்கு காரணமும் பித்ரு தோஷமாக இருக்கலாம்.

அதனால்,நம் முன்னோரை திருப்திபடுத்தாமல் நம்மால் நிச்சயம் முன்னேறமுடியாது. மிகப்பழமையான நூல்களில் கூட பித்ரு தர்ப்பணத்தைப்பற்றி விளக்கமாக எழுதப்பட்டுள்ளது. சாப்பிடக்கூட வசதியே இல்லாதவனாய் இருந்தாலும் காட்டுக்கு சென்று தெற்கு திசையை நோக்கி கைகூப்பி வணங்கி என்னிடம் ஒன்றுமே இல்லை, இந்த தண்ணிரையாவது ஏற்றுக்கொள்ளுங்கள் என்று தண்ணீரை அள்ளியாவது தெளித்தால் பித்ருக்களின் பசி தீர்ந்து நல்லது செய்வார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

ஒன்றுமே இல்லாதவனும்கூட  பித்ரு தர்ப்பணம் செய்யவேண்டியது கடமையாகும். இறந்தவர்களின் திதியில் தர்ப்பணம் செய்வது மிகவும் சிறந்தது. திதி தெரியாமல் போனால் அமாவாசை நாட்களில் ஏதாவதொரு நீர் நிலைகளில் சென்று ஒரு பிராமணரை வைத்து திதி கொடுத்துவிட்டு இரண்டு வசதியில்லாத வயதான ஏழைகளுக்கு வயிறார நல்ல உணவு

வழங்கவேண்டும்.அந்த சாப்பாட்டை சாப்பிட்டு முடிக்கும்போது அவர்களின் மனதில் “ஆஹா இந்த மாதிரி சுவையான திருப்தியான சாப்பாடு சாப்பிட்டு எத்தனைநாள் ஆச்சு?” என்று நினைக்க வேண்டும்.அப்போது அந்த சாப்பாட்டை நம் பித்ருக்கள் சாப்பிட்டதுபோல ஆகி விடும்.

முடிவில் இரண்டு வாழைப்பழம், ஒரு வெற்றிலை பாக்கு, கொஞ்சம் பணம், ஒரு வேஷ்டி துண்டு அல்லது புடவை ஜாக்கெட் தானம் செய்து அவர்களிடம் ஆசி வாங்கினால் பித்ருக்கள் நம்மை வாழ்த்துவார்கள். இதை ஒவ்வொரு வருடமும் தவறாமல் செய்ய வேண்டும்.

பித்ரு திதிகளை இராமேஷ்வரத்தில் செய்வது இன்னும் உத்தமம்

## 9) ஆண் மூலம் அரசாளும்,பெண்மூலம் நிர்மூலம் ன்னு சொல்றாங்களே அது என்ன பழமொழி?

இது ஒரு பழமொழியே இல்லை.புது மொழின்னுதான் இதை சொல்லணும்.ஏன்னா? உண்மையான பழமொழி என்னன்னா?
”ஆனி மூலம் அரசாளும்,பின் மூலம் நிர்மூலம்” அப்படிங்கற பழமொழிதான் காலப்போக்கில் இப்படி புதுமொழியா ஆயிடுச்சு.

மூலம் ங்கறது ஒரு நட்சத்திரம்.அது கேதுவோடது. நம் ஜாதகக்கட்டத்தில் 12 ராசிகள் இருக்கும்,9கிரஹங்கள் இருப்பாங்க,அதே போல நட்சத்திரங்களும் 27 இருக்கு. அந்த மூல நட்சத்திரத்திற்கு மட்டுமே இந்தப்பலன் இருக்குமேயானால் மத்த கிரஹங்களுக்கோ மத்த ராசிகளுக்கோ பவர் ஒன்னுமே இல்லைன்னு அர்த்தமா? லக்னாதிபதின்னு ஒருத்தர் இருப்பார், ராசியாதிபதின்னு ஒருத்தர் இருப்பார் அவர்களுக்கெல்லாம் என்ன வேலை?

நாமளே பிராக்டிகலா பாத்தாலும் நம் கண் முன்னாடியே மூல நட்சத்திரம் உள்ள ஆண்கள் எல்லாம் அரசராகவும் இல்லை, மூல நட்சத்திரம் உள்ள பெண்கள் எல்லாம் நிர்மூலமாகி பிச்சையெடுத்துக்கொண்டிருப்பதும் இல்லை. நிறையப்பேர் மூலநட்சத்திர பெண்ணை மணமுடித்து நல்ல நிலையில் இருக்காங்க.

என்னிடம் 2 மாசத்துக்கு முந்தி 2 பெண்கள் ஜாதகம் பார்க்க வந்தாங்க.ரொம்ப தூரத்திலிருந்து வந்திருந்தாங்க.அதில் ஒரு பெண்ணோட ஒரே பெண்ணுக்கு கல்யாணம் தள்ளிப்போய்க்கிட்டே இருக்குதுன்னும், மூல நட்சத்திரமாக இருப்பதால் மாப்பிள்ளையே கிடைக்க மாட்டேன்கிறதுன்னும் புலம்பிட்டு,கண்ணுல கண்ணீரோட தயவு செஞ்சு இந்த ஜாதகத்தை கொஞ்சம் மாத்தி மூலம் நட்சத்ரம் இல்லாத மாதிரி எழுதிக்கொடுங்கன்னு கேட்டாங்க.

நான்,அந்தப்பெண்ணோட ஜாதகத்தை அலசிப்பார்த்ததில் Actual ஆ மூலத்தினால் கல்யாணம் தாமதமாகலைன்னு தெரிஞ்சு,அவரிடம் நிச்சயமா இந்த மூல நட்சத்ரத்தினால் பிரச்சினையில்லை வேறு தோஷத்தினால் தான் பிரச்சினை என்று சொல்லி அதற்கான பரிகாரமும் சொன்னேன்.3 அல்லது 4 மாதத்தில் நிச்சயம் திருமணம் நடந்து விடும் என்று சொன்னேன்.அதே போல நல்ல முறையில் திருமணம் நடந்து முடிந்தது. இன்னொரு பேமிலியில் என் உறவுக்கார பையன் ஒருவன் வீட்டுக்கு அடங்காமல் திரிந்து கொண்டிருந்தான். அவனுக்கு பெண்கொடுக்கவே யாரும் முன் வரவில்லை.கடைசியில் தேடி,தேடி மூல நட்சத்திரமுள்ள ஒரு பெண்ணை கல்யாணம் செய்து வைத்தார்கள்.குழந்தையும் பிறந்து இப்போது தனியாக ஒரு கூட்ஸ் வேன் வாங்கி யாருடைய உதவியையும் எதிர்பார்க்காமல் நல்ல நிலையில் இருக்கிறான். மூல நட்சத்திர பெண்ணை மணந்ததால் அவன் இன்னும் கெட்டல்லவா போயிருக்க வேண்டும்?ஆனால் அப்படி நடக்காமல் திருந்தி நல்ல வாழ்க்கையில் இருக்கிறான்.

இந்த மாதிரி மூல நட்சத்திரம் மட்டுமே வேலை செய்தால் மற்ற கிரகங்களுக்கும், ராசிகளுக்கும் வேலையில்லாமல் போய்விடுமே.

சர்வ நிச்சயமாக அந்த பழமொழி தவறானது.

## 10) குழந்தை பிறந்தவுடன் ஜாதகம் எழுதலாமா?

ஏன் எழுதக்கூடாது? ஜாதகம் என்பது ஒரு உயிர் ஜெனனம் உருவாகும்போதே பிரம்ம தேவனால் கணிக்கப்பட்டுவிடுகிறது. நாம் எழுதுவெதெல்லாம் 10 மாதம் கழிந்த பின்புதான்.

பிரம்மதேவனால், குழந்தை வயிற்றில் உதிக்கும்போதே அக்குழந்தை என்ன படிக்கும்,என்ன வியாதி வரும்,என்னென்ன குணம் இருக்கும், யாரை கல்யாணம் செய்துகொள்ளும், எப்போது அதன் இறப்பு இருக்கும் என்ற அனைத்து விஷயங்களும் தீர்மானிக்கப்படுகின்றன.

பல நூறு வருஷங்களுக்கு முன்னால் குழந்தை ஜெனனமாகும் நேரத்தை மிக சரியாக குறித்து அப்போதே அக்குழந்தையின் ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்தார்கள்.ஆனால் இப்போது கால மாற்றத்தால்,விஞ்ஞான முன்னேற்றத்தால் குழந்தை பிறக்குபோது தலை எந்த நேரத்தில் பூமிக்கு வருகிறதோ அந்நேரத்தை குழந்தைக்கு ஜாதகம் கணிக்க எடுத்துக்கொள்கிறோம்.

அதன் மூலம் பலன் பார்ப்பதும் சரியாகவே இருக்கிறது.மேலும்,ஒருகுழந்தைக்கு ஜாதகம் உடனே கணிக்காமல் விட்டுவிட்டோமானால் அக்குழந்தையின் ஜாதகத்தில் உள்ள யோகங்களை தெரிந்துகொண்டு நல்ல நேரமாக யோக ஜாதகமாக இருந்தால் தாய்,தந்தை தொழிலில் மாற்றங்கள் செய்யலாம்,வீடு,வாகனம்,வேலையில் பிரமோஷன் ஆகியவற்றுக்கு முயற்சி செய்யலாம்.ஜாதகமே கணிக்காமல் விட்டால் எப்படி இதெல்லாம் சாத்தியம்?

அதனால்,முதலிலேயே பிரம்ம தேவன் கணித்த ஜாதகத்தைத்தான் நாம் இரண்டாம் முறையாக எழுதுகிறோம். மொத்தத்தில் குழந்தைபிறந்த அன்றே ஜாதகம் எழுதினாலும், அப்படி எழுதாமல் 3 வருடம் கழித்து எழுதினாலும் அந்த ஜாதகத்தில் எந்த மாற்றத்தையும் நம்மால் கொண்டு வரமுடியாது.

## 11) ஜாதகம் கையால் எழுதிக்கொடுப்பது சிறந்ததா, கம்ப்யூட்டரில் எடுப்பது நல்லதா?

18 வருடங்களுக்கு முன்பு நான் கையால் ஜாதகம் எழுதிக்கொடுத்துக் கொண்டிருந்தேன். என்ன தான் ஜோதிடர் நிபுணராக இருந்தாலும் சில நேரங்களில் மனிதத்தவறுகள் நடக்க வாய்ப்புகள் உண்டு, அந்த மாதிரி தவறுகள் நடந்து லக்னம் மாறிவிட்டால் பலன்கள் எல்லாமே மாறிவிடும்.நிறைய திறமையான ஜோதிடர்களும் ஜாதக கணக்கு விஷயத்தில் தவறியுள்ளதை நான் பார்த்திருக்கிறேன்.

ஆனால் கம்ப்யூட்டரில் தவறு நடக்க வாய்ப்பில்லை. நாம் கொடுக்கும் DATAக்களில் தவறு இருந்தால் ஒழிய கம்யூட்டர் தவறு செய்யாது. மேலும் ஒருவாரம் முழுக்க உட்கார்ந்து கணக்கு போடும் வேளையை அது Just fraction of second ல் துல்லியமாக போட்டுவிடும்.ஒரு 300 அல்லது 400 ரூபாய்க்கு கம்ப்யூட்டரில் ஜாதகம் எடுத்தால் போதும்.அந்த ஜாதகரின் அனைத்துக்கணிதமும் துல்லியமாக தரப்பட்டிருக்கும்.

அதெற்கென உருவாக்கப்படும் சாப்ட்வேர்களையும் ஜோதிடர்கள் உடனே வாங்கி விடுவதில்லை. பல ஜோதிட மாநாடுகளில் சிபாரிசு செய்யப்படும் சாப்ட்வேர்களையே உபயோகிக்கிறோம் ஏன்னா?எங்க தொழிலே அதுதானே. அதில் தப்பு வந்தால் பலன்களிலும் தப்பு வந்துரும்,அதனால சாப்ட் வேரை முழுமையா check செஞ்சதுக்கப்புறம்தான் ஜோசியரெல்லாம் வாங்குவோம். அதனால் கையால் எழுதிவைத்துள்ள ஜாதகங்களை கம்ப்யூட்டரில் மாற்றி எடுத்து வைத்துக்கொள்வது மிகவும் நல்லது.

## 12) குல தெய்வத்திற்கும் மற்ற தெய்வத்திற்கும் என்ன வேறுபாடு?

குல தெய்வம் என்பது நம்முடைய பெற்ற அம்மாளைப்போன்றது. மத்த தெய்வங்கள் நமக்கு பிடித்திருந்தாலும் அந்த தெய்வங்கள் நமக்கு அருள்பாலிப்பதை விடவும் குல தெய்வம் நமக்கு எல்லா வசதிகளையும் கொடுத்துவிட முடியும்.

வருஷாவருஷம் பழனிக்கு மாலை போட்டு சென்று முருகனை வழிபட்டாலும்,அதே போல ஐயப்பனுக்கு மாலை போட்டு சென்றுவந்தாலும் குல தெய்வத்தின் கோயிலுக்கு செல்லாமல் அந்த தெய்வங்களின் அருள் நமக்கு கிடைக்காது. அந்த தெய்வங்கள் குலதெய்வத்தை கேட்டுத்தான் நமக்கு நன்மை செய்யும்.அல்லது குலதெய்வ வாயிலாகத்தான் நன்மைகள் நடக்கும். அதற்காகத்தான் குலதெய்வம் என்று தனியாக வைத்துள்ளார்கள்.குல தெய்வம் மறுத்துவிட்டால் மற்ற தெய்வங்களால் நமக்கு நன்மை செய்யமுடியாது.

என் கோயிலுக்கே வருவதில்லை,எல்லாத்தையும் நிறுத்திவை என்று அத்தெய்வங்களிடம் குல தெய்வம் சொல்லிவிடும்.அதனால் எப்போதும் திருப்பதி, பழனி மாதிரி பெரிய கோயில்களுக்கு சென்றாலும் atleast 1வாரம் முன்பாவது குலதெயம் கோயிலுக்கு சென்று நான் இன்ன காரியத்திற்காக வெங்கடேசனை பார்க்க செல்கிறேன்,வாங்கிக்கொடுக்க வேண்டியது உன் பொறுப்பு என்று பயபக்தியுடன் கும்பிட்டு சென்றால் போறகாரியம் முக்கால்வாசி அன்றே ஜெயமாகிவிடும்.

இது தான் குல தெய்வத்திற்கும் மற்ற தெய்வங்களுக்கும் உள்ள வித்தியாசம்.குல தெய்வம் எது என்று தெரியாதவர்கள் அதற்கான பரிகாரங்களை முறையாகச்செய்தால் குல தெய்வம் கனவில் வந்து தன்னை நிலை நிறுத்தும்.

## 13.) பரிகாரங்களுக்கெல்லாம் சிகரம் இராமேஸ்வரம் னு சொல்றாங்க அப்படி அங்க என்ன விஷேசம்னு சொல்லமுடியுமா சார்?

இராமேஷ்வரம் - இந்தியாவில் மிக மிக முக்கியமான திருத்தலம்.வாழ்க்கையில் ஒரு முறையாவது காசி இராமேஸ்வரம் சென்று வரவேண்டும் என்று நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.அதாவது என்ன அர்த்தம்னா!காசி இராமேஸ்வரம் சும்மா போயிட்டு வந்தாலே பாவம் கரைஞ்சு போயிடும்ங்கறது ஐதீகம்.

அப்படி என்ன Special இராமேஸ்வரத்தில்? நம் இந்திய இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத்தின் மிக முக்கிய நிகழ்வுகள் இங்குதான் நடந்தன. இதிகாசக்கடவுளான ராமர் மனித அவதாரத்தில் பூமிக்கு வந்து சீதா தேவியின் பொருட்டு இராவணனை கொன்றார்.

இராவணன் கடுமையான சிவ பக்தன், தினமும் சிவபெருமானை 6 கால வேளை பூஜிக்கக்கூடியவன். கணக்கிலடங்கா வரங்களை வாங்கியவன். அதனால் பிராமணருக்கு இணையானவன். பிராமணனை கொன்றால் கடுமையான பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக்கொள்ளும்.

இராவணனை கொன்றதால் ராமருக்கு அந்த தோஷம் பிடித்து விட்டது.அந்த தோஷத்தை முறையாக கழிக்காமல் அவதாரம் நிறைவுறாது. அதனால் ஸ்ரீ ராமரே தன் கையால் சிவ லிங்கத்தை செய்து அவரே மந்திரம் சொல்லி பிரதிஷ்டை செய்து பிரம்ம ஹஸ்தி தோஷத்தைப்போக்கிக்கொண்டு, தன் தந்தைக்கு முறையாக திதி கொடுத்த புண்ணிய ஸ்தலம் இராமேஸ்வரம்.

அவதார புருஷனான ஸ்ரீ ராமபிரான் மந்திரம் சொல்லி கட்டிய கோயில் என்பதால் அந்த மந்திரங்களும், சக்தியும் என்றும் அழியா நிலை எய்திவிட்டன.

அதனால் தான் இராமேஸ்வரத்தில் பரிகாரம் செய்தால் அங்கிருக்கும் மந்திர சக்தியின் விளைவாக நம் தோஷங்கள் நல்ல முறையில் போக்கப்படுகின்றன.

## 14) சித்தர்கள் என்பது யார்? அவர்களைப்பற்றி கொஞ்சம் சொல்ல முடியுமா சார்?

சித்தர்கள் என்பவர்கள் மனிதர்கள் ரூபத்தில் இருக்கும் தேவ தூதர்கள்.அவர்களால் இப்பூவுலகில் அனைத்தும் சாதிக்க முடியும். மனிதர்களுக்கும்,பகவானுக்கும் இடையே இருக்கும் நல்லெண்ண தூதுவர்கள்.இவர்களுடை அருள் சாதாரணமானவர்களுக்கு கிடைக்காது. கொஞ்சமேனும் சுயநலமில்லாமல் அடுத்தவர்களுக்கு உதவும் எண்ணம் கொண்ட நல்ல ஆத்மாக்களுக்கே சித்தர்களின் தொடர்பு கிடைக்கும்.

எப்படிப்பட்ட நோய்களையும் சித்தர்களால் தீர்க்க முடியும்.அவர்களின் சமாதிகளான ஜீவ பிருந்தாவனத்திற்கு சென்றாலே,அவர்கள் சக்தியை நம்மால் உணர முடியும்.

அகத்திய முனிவரின் அருள் இருந்தால் தான் நல்ல ஜோசியராக முடியும். இனிமையான தமிழுக்கும்,ஜோதிடத்துக்கும் அவர்தான் முன்னோடி.முருகக்கடவுளின் மற்றுமொரு சக்தி அவர். அவரின் முதன்மை சீடர்தான் போகர் என்ற மருத்துவ சித்தர்பெருமான்.அவரே பழனியில் திருமுருகனின் பஞ்சலோக சிலையை வடிவமைத்தவர்.அதனாலேயே அந்தக்கோயிலுக்கு செல்லும் வியாதியஸ்தர்கள் குணமானார்கள்.

அருணாச்சலேஸ்வரர் கோயிலை உண்மையான பக்தியுடன் கிரிவலம் வந்து வணங்கியவர்களுக்கு சித்தர்கள் ஏதாவது ஒரு உருவில் காட்சியளித்திருப்பார்கள். ஆனால் உண்மையான பக்தி வேண்டும். 4,5 பேர் சேர்ந்து கண்டதையும் பேசிக்கொண்டு, ஜாலியாக கிரிவலம் வருவதில் பிரயோஜனம் இல்லை.தனியாக கிரிவலம் சுற்ற வேண்டும்.சுற்றி இருக்கும் அனைத்து கோயில்களுக்கு உள்ளேயும் சென்று அனைத்துக் கடவுள்களையும் மனதார வணங்க வேண்டும்.மனதில் கடவுள் எண்ணங்களே இருக்கவேண்டும். அப்படி சுற்றினால் நிச்சயம் சித்தர் பெருமக்களின் தொடர்பும் ஆசியும் கிடைக்கும்.

வருடத்திற்கு ஒருமுறையாவது கர்னாடகத்தில் இருக்கும் நவபிருந்தாவனத்திற்கு சென்று வருவது மிக நல்லது.

## 15) சில நேரங்களில் ஜோதிடம் பொய்யாகிறதே எதனால் சார்?

ஜோதிடம் எப்போதுமே பொய்யாவதில்லை.கணிதங்கள் மாறுபடுவதன் விளைவுதான் இது. கடந்த 25 வருடங்களுக்கு முன்பு கைக்கடியாரம் கட்டியவர்கள் குறைவு.வீட்டிலும் சுவர்க்கடியாரம் பலவீடுகளில் கிடையாது.அப்படிப்பட்ட காலங்களில் வானத்தைப்பார்த்துத்தான் நேரத்தை கணித்தார்கள்.அப்படிகணிக்கும்போது சில தவறுகள் நடக்க வாய்ப்புள்ளது. லக்னம் என்பது 2மணிக்கொருமுறை மாறக்கூடியது.குழந்தை பிறக்கும் ஊரில் சூரியனின் நிலையை வைத்து கணிதமிட்டு எழுதுவதுதான் லக்னம்.

உதாரணத்திற்கு சரியாக லக்னம் மாறும் நேரத்தில் ஒரு குழந்தை பிறப்பதாகக்கொண்டால் அதன் பிறந்த நேரம் மிகத்துல்லியமாக இருந்தால் மட்டுமே லக்னம் சரியாக அமையும். இல்லையெனில் லக்னம் மாறிவிட வாய்ப்புண்டு. பழைய கைகளால் எழுதப்பட்ட ஜாதகங்களில் நான் நிறைய இந்த தவறுகளை பார்த்திருக்கிறேன்.லக்னம் மாறிவிட்டால் செவ்வாய் தோஷம்,ராகு கேது தோஷம்,மற்றும் பலன்கள் எல்லாமே அனைத்தும் மாறிவிடும்.

அந்த தவறாக கணிக்கப்பட்ட ஜாதகத்தை கொண்டு சென்றால் ஜோசியரால் அந்த ஜாதகத்திற்கான பலன்களைத்தான் கூறமுடியும்.பல Point கள் தவறாவதால் ஜோதிடர் கண்டுபிடித்து இந்த ஜாதகம் தவறானது என்று சொல்லிவிடுவார். இந்த மாதிரி காரணங்களால் ஜோதிட பலன்கள் மாறுபடும்.என்றுமே ஜோதிடம் பொய்யாவதில்லை.

சுபம்